# மேல்நிலை இரண்டாமாண்டு

# இந்தியப் பண்பாடு

# மாதிரி வினாத்தாள்

நேரம் 3 மணி | மொத்த மதிப்பெண்கள் 200

பகுதி அ

**I.** எல்லா வினாக்களுக்கும் விடையளி:

அ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் **10 x 1 = 10**

1. இல்லற வாழ்வில் ஈடுபட்டு அறம் பிறழாமல் தான தருமங்களைச் செய்து வாழ்வது

   அ. பிரம்மசர்யம் ஆ. கிரஹஸ்தம்

   இ. வனப்பிரஸ்தம் ஈ. சன்னியாசம்

2. பில்லி, சூனியம், பிசாசு, மந்திரக் கட்டு என பலவற்றைக் கூறுவது

   அ. அதர்வண வேத சம்ஹிதைகள் ஆ. பிராமணங்கள்

   இ. ஆரண்யங்கள் ஈ. உபநிடதங்கள்

3. நாடக உலகின் இமயம் எனக் கருதப்பட்டவர்

   அ. பம்மல் சம்பந்த முதலியார் ஆ. பேரறிஞர் அண்ணா

   இ. சங்கரதாஸ் சுவாமிகள் ஈ. நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை

4. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒரே பொருளாளானவை என்றும் ஜீவாத்மா பரமாத்மாவிலிருந்து வெளிப்பட்டது என்றும் கூறப்படுவது

   அ. துவைதம் ஆ. அத்வைதம்

   இ. கீதா உபதேசம் ஈ. விசிஷ்டாத்வைதம்

5. அசோகரின் ஆட்சிக்காலம்

   அ. கி.மு. 322 - கி.மு. 298 ஆ. கி.மு. 298 - கி.மு. 273

   இ. கி.மு. 273 - கி.மு. 232 ஈ. கி.மு. 232 - கி.மு. 182

6. ''தேம்பாவணி'' என்ற நூலை இயற்றியவர்

   அ. கால்டுவெல் ஆ. வீரமா முனிவர்

   இ. ஜி.யு. போப் ஈ. அல்பருனி

7. 'வாழ்வு ஒரு விளையாட்டு; வீர தீரச் செயல்; ஆனால் போராட்டமன்று; ஏமாற்றமிக்க கதையுமன்று' எனக் கூறியவர்

   அ. பசவர் ஆ. ஏகநாதர்

   இ. துளசிதாசர் ஈ. சூர்தாசர்

8. கூர்மையான அறிவுடையவர்கள் நல்லதையும் கெட்டதையும் மற்றும் நிலைத்திருப்பதையும் அழிந்து விடுவதையும் சிந்தித்து உணரும் ஆற்றலுடைய மார்க்கமானது

   அ. ஞானமார்க்கம் ஆ. இராஜமார்க்கம்

   இ. கர்ம மார்க்கம் ஈ. பக்தி மார்க்கம்

9. ''இந்தியா இந்தியருக்கே'' என்று முழக்கமிட்டவர்

அ. இராஜாராம் மோகன்ராய் ஆ. சுவாமி தயானந்தர்

இ. சுவாமி விவேகானந்தர் ஈ. அன்னிபெசன்ட் அம்மையார்

10. ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன், பசியால் இளைத்தேன்'' என்று கூறியவர்.

அ. தாயுமானவர் ஆ. பாரதியார்

இ. இராமலிங்க அடிகள் ஈ. காரைக்கால் அம்மையார்

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக: **10 x 1 = 10**

11. பிரபஞ்சம் இயங்கிக்கொண்டிருப்பது ________________ அடிப்படையாகும்.

12. குருகுல கல்வி முறையில் __________ ஆண்டுகள் ஆசிரியருடன் தங்கி கல்வி பயின்றனர்.

13. தென்னவர் வாழ்ந்த நாட்டை _____________ என்றும், அவர்களுடைய மொழியை ___________ என்றும் வரலாறு கூறுகிறது.

14. இந்து மதம் என்பதற்கு _____________ என்ற வேறு பெயரும் உண்டு.

15. சமண சமயத்தின் மிக உயர்ந்த கொள்கை __________ அல்லது __________ ஆகும்,

16. அரசனுக்கு ஆலோசனை வழங்குவதற்கு _________ என்ற அமைச்சர் குழு இருந்தது,

17. வினைப் பயனைப் பொறுத்து ஒவ்வொரு மனிதனும் _________ , __________ சென்றடைவான் என்பது இசுலாமியர்களின் நம்பிக்கையாகும்.

18. பெரியாழ்வாருக்கு ___________, ___________ என்ற பெயர்கள் உண்டு.

19. இராஜாராம் மோகன்ராய் கி.பி. 1815-ல் கல்கத்தாவில் ____________ என்பதை நிறுவினார்,

20. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளின் சங்கமமானது __________ என்று அழைக்கப்படுகிறது,

இ. பின்வருவனவற்றைப் பொருத்துக: 10 **x 1** = 10

| | | | |
|---|---|---|---|
| 21. | யாதும் ஊரே<br>யாவரும் கேளிர் | - | மெய்கண்ட தேவர் |
| 22. | வியாக்கரணம் | - | திருத்தக்க தேவர் |
| 23. | நிஷ்கா | - | தயானந்த சரஸ்வதி |
| 24. | சீவக சிந்தாமணி | - | கனியன் பூங்குன்றனார் |
| 25. | மும்மணிகள் | - | நாணயம் |
| 26. | ஆரியபட்டர் | - | சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு |
| 27. | விவிலியம் | - | இலக்கணம் |
| 28. | சிவஞான போதம் | - | சமணக் கோட்பாடு |
| 29. | சத்தியார்த்த பிரகாசம் | - | கிறித்துவ கோட்பாடு |
| 30. | மரம் நடுவோம்<br>மழை பெறுவோம் | - | வானவியல் |

ஈ. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி: 15 **x** 1 = 15

31. உலகின் உறுதிப் பொருட்கள் யாவை?
32. இந்தியாவின் உயரிய தனிச் சிறப்பு யாது?
33. சிந்துவெளி நாகரிகத்தை உலகறியச் செய்தவர் யார்?
34. 'வேதம்' என்ற சொல்லின் பொருள் யாது?
35. 'ஜனா' என்றால் என்ன?
36. 'ஆக்னேயம்' என்றால் என்ன?
37. தமிழர் பண்பாட்டின் சிகரமாய் எதனைக் கூறலாம்?
38. இதிகாசம் என்பதன் பொருள் யாது?
39. சமண சமயத்தின் இரு பிரிவுகள் யாவை?
40. புத்த சமயத்தின் வேத நூல் எது?
41. தரும மகா மாத்திரர்கள் என்பவர் யார்?
42. சூபி இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?
43. பக்தியின் இரு வகைகள் யாவை?
44. பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தவர் யார்?
45. பஞ்ச பூதங்கள் என்பவை யாவை?

பகுதி - ஆ

**II.** எவையேனும் பதினைந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகட்கு மிகாமல் விடையளி :

15 **x** 3 = 45

46. இந்தியப் பண்பாடு அழியாத் தன்மை உடையது எங்ஙனம்?
47. 'நாகரிகம்' - சொல்விளக்கம் தருக.
48. இந்தியாவை இன அருங்காட்சியகம் என டாக்டர் ஸ்மித் கூறக் காரணம் யாது?
49. சிந்துச் சமவெளி மக்களின் சமுதாய வாழ்வினை எழுதி, அந்நாகரிகம் அழிவதற்கான காரணங்களைக் கூறுக.
50. 'சுருதி', 'ஸ்மிருதி' பற்றி நீவிர் அறிவன யாவை?
51. ஜீவ காருண்ய ஒழுக்கம் என்றால் என்ன?
52. இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசைக்கு ஆற்றிய அரும்பணி யாது?
53. உலகத்தோற்றம் பற்றி தொல்காப்பியர் கூறுவன யாவை?
54. மகாவீரர் போதித்த உண்மைகள் யாவை?
55. நான்கு ஆரிய சத்தியங்கள் என்பதை நீ எவ்வாறு அறிவாய்?
56. அசோகரின் ஏழாவது கல்வெட்டின் செய்தி யாது?
57. 'குப்தர்காலம் பொற்காலம்' என்பதை நீ எவ்வாறு அறிவாய்?
58. கடவுள் குறித்து இஸ்லாமியர்களின் நம்பிக்கை யாது?
59. கிறித்துவ சமயக் கோட்பாடுகள் யாவை?
60. வீரசைவம் (அ) லிங்காயதம் பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?

61 .சிவனை வழிபடுவதால் அடையும் நன்மைகளாக சம்பந்தர் கூறுவன யாவை?

62. ஆரிய சமாஜத்தின் கல்வி பணியை எழுது?

63. அஹிம்சை குறித்து காந்தியடிகளின் கருத்து யாது?

64. பஞ்ச சீலக் கொள்கையை விவரி.

65. இந்தியச் சுற்றுச்சூழல் பற்றி சுருக்கி எழுது,

பகுதி - இ

**III.** எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகட்கு மிகாமல் விடையளி:

10 **x** 6 = 60

66. மனித நேயமே இந்தியப் பண்பாட்டின் அடித்தளம் என்பதை விவரி.

67. சிந்து வெளி மக்களின் 'சமயம்' பற்றி விவரி.

68. நான்கு வேதங்களில் கூறப்படும் செய்திகளைத் தொகுத்து எழுது,

69. சிந்து சமவெளி மக்கள் இந்தியப் பண்பாட்டிற்கு அளித்த கொடையினை விவரி,

70. புராணங்களின் இன்றியமையாமையை விவரி,

71. இந்தியப் பண்பாட்டிற்கு தமிழகத்தின் கொடையினை எழுது.

72. தமிழர் பண்டிகையாம் பொங்கல் திருநாளைப் பற்றி எழுதுக.

73. இந்து சமய விழாக்களைப் பற்றி விவரி.

74. பிற்காலப் பல்லவர்களின் கட்டடக்கலை வளர்ச்சி பற்றி விளக்கி எழுது,

75. பிற்காலப் பாண்டியரின் இசை, நடனம், நாடகக் கலை பற்றி விளக்குக.

76. இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு கிறித்துவ தொண்டு நிறுவனங்களின் பணிகள் யாவை?

77. இந்தியப் பண்பாட்டில் இஸ்லாம் சமயத்தின் கொடைகள் யாவை?

78. பக்தி இயக்கத்தின் விளைவுகள் யாவை?

79. விவேகானந்தரின் பொன்மொழிகளைக் கூறுக,

80. சுற்றுப்புறச் சூழலைப் பேணுவதில் மாணவர்களின் பங்கை விவரி.

பகுதி - ஈ

**IV.** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்க அளவில் விடையளி:

5 **x** 10 = 50

81. இந்தியாவில் நிலவும் வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை எவ்வாறு நிலவுகின்றது?

82. இந்தியப் பண்பாட்டிற்கு சமண சமயத்தின் பங்கினை விவரி.

83. சோழர்காலப் பண்பாடு குறித்து ஒரு கட்டுரை வரைக.

84. பக்தி நெறி தோன்றக் காரணங்களையும் அதன் சீரிய பண்புகளையும் குறித்து ஒரு கட்டுரை வரைக.

85. சீர்திருத்த இயக்கங்கள் தோன்றக் காரணங்களையும் அதன் விளைவுகளையும் குறித்து ஒரு கட்டுரை வரைக.

86. உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் கொடை என்ற தலைப்பில் நீவீர் தரும் செய்திகள் யாவை?

87. இந்தியப் பண்பாடும் சுற்றுப்புறச் சூழலும் பற்றி ஒரு கட்டுரை வரைக.